காரைதீவு பிரதேச சபை - 2024

----

1. நிதிக்கூற்றுக்கள்

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

காரைதீவு பிரதேச சபையின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானங்கள் மற்றும் செலவுகள் கணக்கு, காசுப்பாய்ச்ல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரச் சட்டத்தின் 172(1) ஆம் உப பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் தரப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு காரைதீவு பிரதேச சபையின் நிதிநிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்படும் கணக்கீட்டு நடைமுறைகளுக்கு இணங்க உண்மையாக மற்றும் நியாயமாக வெளிப்படுத்துகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க என்னால் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. இக்கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்பு, இந்த அறிக்கையின் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் என்ற பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் வகையில் என்னால் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு சான்றுகள் போதியளவானவை மற்றும் பொருத்தமானவை என்பது எனது நம்பிக்கையாகும்.

1.3 நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக முகாமைத்துவத்தினதும் தொடர்புபட்ட நிருவகிக்கின்ற தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்தலும் நியாயமாகச் சமர்ப்பித்தலும் மற்றும் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்ற நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு இயலுமான வகையில் தேவையான உள்ளகக் கட்டுப்பாட்டினைத் தீர்மானிப்பது முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு, நிருவகிக்கின்ற தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் அதன் பொருண்மையான தன்மையானது இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் அமுல்படுத்தப்படுகின்ற பொருளாதார தீர்மானம் தொடர்பான ஏற்படுத்துகின்ற தாக்கத்தின் அடிப்படையில் தங்கியுள்ளது.

இலங்கை கணக்காய்வு நியமத்தின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் நடவடிக்கை எடுக்கப்பட்டது. என்னால் மேலும்:

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் ஆகிய காரணங்களினால் ஏற்படுவதினாலாகும்.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான அறிவு பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்தப்படுகின்ற கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத் தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை, முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் வெளிப்படுத்தல்கள் என்பன மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களுக்கான அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளன எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வகையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருனவற்றை பரீட்சிப்பதற்காக கணக்காய்வு நோக்கெல்லை விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களைச் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள் நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாகவும் பேணிச் செல்லப்படுகின்றதா எனவும்,

- உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட ஏனைய பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க பிரதேச சபை செயற்படுகின்றதா எனவும்,

- தனது அதிகாரங்கள், கடமைகள், மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா எனவும்,

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதா எனவும் ஆகும்.

1.5 ஏனைய சட்டரீதியான தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தில் கீழே குறிப்பிட்ட தேவைப்பாடுகள் சம்பந்தமாக விசேட ஏற்பாடுகள் உள்ளடக்கப்பட்டன.

(அ) பிரதேச சபையின் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்கியுள்ளன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்படுகளுக்கு இணங்க முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட சிபாரிசுகளானவை சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

1.6 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது சம்பந்தமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரைகள்	சிபாரிசுகள்
(அ)	மீளாய்வாண்டில் மோட்டார் வாகனம் மற்றும் வீதிகளுக்கு மேற்கொள்ளப்பட்ட செலவு கூட்டுமொத்தம் ரூபா 4,053,829 உரிய கணக்குகளில் சேர்த்துக்கொள்ளப்படவில்லை.	சொத்துக்களுடன் சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	ஊரிய கணக்குகளில் சேர்க்க நடவடிக்கைகளை எடுத்தல்வேண்டும்
(ஆ)	மீளாய்வாண்டிற்கு முன்னைய ஆண்டுக்கான நீதிமன்ற தண்டப்பணமான ரூபா 392,569 மீளாய்வாண்டிற்குரிய வருமானமாக கணக்குகளில் காட்டப்பட்டிருந்தது.	நிதியறிக்கை தயாரித்த பின்னரே நவம்பர், திசெம்பர் மாத தண்டப்பண கடிதங்கள் கிடைக்கப் பெற்றதால் நிலுவையாக காண்பிக்கப்படவில்லை.	வருமானங்கள் உரிய காலப்பகுதியினுள் அடையாளம் காணப்படல் வேண்டும்.
(இ)	மீளாய்வாண்டில் நிர்மாணிப்பு வேலைகளுக்கு கொடுக்க வேண்டிய ரூபா 16,127,181 நிதிக்கூற்றுக்களில் பொறுப்பாகக் காட்டப்படவில்லை.	தாமதமாக கட்டுநிதி பெறப்பட்டிருந்தது	நிதிக்கூற்றுக்களில் பொறுப்பாக காட்டுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப் படல் வேண்டும்.

1.6.2 கணக்காய்விற்காக எழுத்துமூலச் சான்றுகள் இல்லாமை

கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	சிபாரிசு
நிலையான சொத்துக்களில் ஐந்தொகை திகதியின் படி ஆரம்ப மீதியான கூட்டுமொத்தம் ரூபா 4,368,793 க்கான விபரமான ஆவணங்களின்றி காட்டப்பட்டிருந்தது.	காரைதீவு பிரதேச சபை தனியாக பிரிக்கப்பட்ட போது நிந்தவூர் பிரதேச சபையினால் வழங்கப்பட்ட தொகையினையே குறித்து நிற்கின்றது.	விபரமான ஆவணங்களை பெற்றுக் கொள்ள நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

1.7 இணக்கமின்மைகள்

1.7.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள்

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுக்கான தொடர்பு	இணக்கமின்மைகள்	சபையின் கருத்துரைகள்	சிபார்சுகள்
1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின்			
(i) 24 ஆம் பிரிவின் 1(அ) மற்றும் (ஆ) உப பிரிவு.	சபையினால் பேணப்படும் வீதிகளினதும் பாதைகளினதும் வரைபடங்கள் தயாரித்தல் மற்றும் அவற்றின் அறிவித்தல்களை வெளியிடுதல் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	பழுதடைந்த பெயர் பலகையினை மீளமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.	பிரதேச சபைகள் சட்டத்தின் பிரகாரம் உரிய நடவடிக்கைகளை துரிதமாக மேற்கொள்ள வேண்டும்.
(ii) 128 பிரிவு	சபையில் பயன்படுத்தப்படும் ஆதனங்களினை அடையாளம் கண்டு அவற்றின் உரிமையினை சுவீகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	வருமானம் அறவிட, உரிமை மாற்றத்திற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.	-மேற்படி-
(iii) 134 பிரிவு	அதிகார எல்லையினுள் அமைந்துள்ள வருமான மூலங்களை இணங்கன்டு கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	புதிய வருமான முலகங்களை அடையாளம் நடவடிக்கை எடுக்கப்படும்.	-மேற்படி-

1988 இன் பிரதேச சபைகள் (நிதி மற்றும் நிருவாக) விதிகள் இலக்கம் 5(xii) விதி	காசாளர், வருமானம் அறவிடுபவர் காசோலைகளில் கையொப்பமிடுபவர், களஞ்சிய பொருள் காப்பாளர் முதலியவற்றுடன் தொடர்புடைய உத்தியோகத்தர்களிடமிருந்து போதுமான பிணைப்பணங்களை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	பதில் தரப்படவில்லை.	நிதி நிருவாக விதிகளின் பிரகாரம், உரியவர்களிடம் பிணைப்பணம் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

2. நிதி மீளாய்வு

2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் வருமானத்தினை மிகைத்த மீண்டுவரும் செலவுகள் ரூபா 6,845,122 ஆக இருந்ததுடன், இதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவுகளை மிகைத்த வருமானம் ரூபா 14,749,080 ஆகும்.

2.2 வருமான நிருவாகம்

2.2.1 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே தரப்படுகின்றன.

		2024				2023			
	வருமான மூலம்	மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம்	பட்டியலிடப்பட்ட வருமானம்	சேகரிக்கப்பட்ட வருமானம்	திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை	மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம்	பட்டியலிடப்பட்ட வருமானம்	சேகரிக்கப்பட்ட வருமானம்	திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை
		ரூபா	ரூபா	ரூபா	ரூபா	ரூபா	ரூபா	ரூபா	ரூபா
(i)	வீதவரியும் வரியும்	25,000	-	-	-	25,000	9,180	9,180	-
(ii)	வாடகை	10,754,000	10,166,157	9,093,793	1,072,364	8,675,000	7,690,625	6,766,985	2,699,890
(iii)	உத்தரவுப்பத்திரக் கட்டணம்	6,862,000	6,527,520	4,937,960	1,589,560	850,000	1,271,240	1,271,240	-
(iv)	ஏனைய வருமானம்	623,000	887,619	888,019		1,215,000	561,704	561,704	-
	கூட்டுத் தொகை	**18,264,000**	**17,581,296**	**14,919,772**	**2,661,924**	**1,0765,000**	**9,532,749**	**8,609,109**	**2,699,890**

2.2.2 வருமானங்களை சேகரிக்கும் செயலாற்றல்

சபையின் அனைத்து வருமானங்களையும் சேகரிக்கும் செயலாற்றல் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே தரப்படுகின்றன.

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரைகள்	சிபாரிசுகள்
(அ)	மீளாய்வாண்டின் இறுதியில் அறவிடப்பட வேண்டிய அங்காடி வர்த்தக நிலைய மற்றும் கடற்கரைப் பூங்கா வாடகை உட்பட ரூபா 75,843 காணப்படுவதுடன் அவை 1 தொடக்கம்	உரிய நபரை தொடர்பு கொள்ள முடியவில்லை. இதனால் நிலுவையாக காணப்படுகின்றது.	அறவிட வேண்டிய நிலுவை வருமானங்களினை மிக விரைவாக

	16 ஆண்டுகள் வரை அறவிடப்படாமல் காணப்பட்டிருந்தன.		அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஆ)	மீளாய்வாண்டின் இறுதியில் கேள்வி மீதான இறைச்சிக் கடை குத்தகை வழங்கலினால் பெறவேண்டிய ரூபா 2,008,592 அறவிடப்படாமல் காணப்பட்டிருந்ததுடன், அதில் ரூபா 1,026,520 ஆனது 2 தொடக்கம் 33 ஆண்டுகள் வரை இறைச்சிக் கடை உரிமையாளர்களிடமிருந்து அறவிட வேண்டியதாக இருந்தது.	பதில் தரப்படவில்லை.	அறவிட வேண்டிய நிலுவை வருமானங்களினை மிக விரைவாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(இ)	மீளாய்வாண்டில் 09 வியாபார நிலையங்கள் சூழல் பாதுகாப்பு உரிமம் புதுபிக்கப்படாமல் தொடர்ந்து இயங்கிக் கொண்டிருக்கின்றன. இருப்பினும் செயலாளரினால் எதுவித நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. இதனால் சபைக்கு அண்ணளவாக ரூபா 36,000 வருமானம் இழக்கப்படுகின்றன	பதில் தரப்படவில்லை.	சூழல் பாதுகாப்பு உரிமம் புதுபிக்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஈ)	ஒவ்வொரு காலாண்டின் இறுதியிலும் காணி கொடுக்கல் வாங்கள் மீதான முத்திரைக் கட்டணங்கள் மீளளிப்பு கோரல் தொடர்பில் விண்ணப்பங்கள் பதிவாளர் நாயத்திற்கு அனுப்பப்பட வேண்டியிருந்த போதிலும், சபையினால் மீளாய்வாண்டில் முத்திரைக் கட்டணம் உரிய காலப்பகுதியில் கணிப்பீடு செய்யப்பட்டு கோரிப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	பதில் தரப்படவில்லை.	சட்டத்தின் பிரகாரம், உரிய காலத்தில் அறிவிட நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

3. செயற்பாட்டு மீளாய்வு

பிரதேச சபை அதிகாரச்சட்டத்தின் 3 ஆம் பிரிவு என்பவற்றின் கீழ் பொது சுகாதாரம், பொதுப் பாவனைச் சேவைகள், பொது வீதி தொடர்பான விடயங்களை முறைமைப்படுத்துதல் மற்றும் நிருவகித்தல், பொதுமக்களின் நல்வாழ்வு, வசதிகள், நலன்புரி என்பனவாக சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியிருந்த செயற்பாடுகளை நிறைவேற்றுவது தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே தரப்படுகின்றன.

3.1 முகாமைத்துவ செயற்திறனின்மை

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரைகள்	சிபாரிசுகள்
(அ)	2018 ஆம் ஆண்டு தொடக்கம் 2024 ஆண்டின் இறுதி வரைக்கும் 14 கடையறைகளினை வாடகைக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமையினால் சபைக்கு வருடாந்தம் ரூபா 1,512,000 வருமான இழப்பு ஏற்பட்டிருந்தது.	பதில் தரப்படவில்லை.	கடைகளையும் வாடகைக்கு வழங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஆ)	சபையின் எல்லைக்குட்பட்ட வீதிகளில் மின் விளக்குகள் பொருத்துதல் மற்றும் பராமரிப்பு தொடர்பில் மின் விளக்குகளின் எண்ணிக்கை மற்றும் வகை, மின் குமிழ்களின் வொட் (Watt)	பதில் தரப்படவில்லை.	முறையான தெரு விளக்குப் பதிவேடு பேணுவதற்கு நடவடிக்கை

	மற்றும் மின் தூண்களின் இலக்கங்கள் போன்றவற்றை உள்ளடக்கிய முறையான தெருவிளக்கு பதிவேடு பேணுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.		எடுக்கப்படல் வேண்டும்.
(இ)	சபையினால் அதிகாரமற்ற கட்டிடங்களுக்காக ரூபா 242,689 தண்டபணம் அறவிடப்பட்டிருப்பினும் நகர அபிவிருத்தி அதிகார சபையின் 30 செப்ரெம்பர் 1987 ஆம் திகதிய திட்டமிடல் சுற்றறிக்கை இல 08 இற்கமைய நகர அபிவிருத்தி சபையினால் தனியான வங்கி கணக்கு பேணப்பட்டு அது தொடர்பான வருமானங்கள் வரவு வைக்கப்படவேண்டும். இருப்பினும் சபையினால் இன் நடைமுறை பின்பற்றப்பட்டிருக்கவில்லை.	பதில் தரப்படவில்லை.	தனியான வங்கி கணக்கு பேணப்பட்டு வருமானங்கள் வரவு வைக்கப்படல் வேண்டும்.
(ஈ)	2002 ஆம் ஆண்டு 14 ஆம் இலக்க பெறுமதி சேர்வரி (VAT) சட்டத்திற்கிணங்க பெறுமதி சேர்வரி செலுத்துவோர் தங்களை பதிவு செய்து தனியான குறியீட்டு இலக்கம் (Tin Number) ஒன்றினை பெற்றுக்கொள்ள வேண்டும். இருப்பினும் சபையினால் எதுவித வரிப்பதிவும் மேற்கொள்ளப்படாமல் மீளாய்வாண்டில் அதிகாரமற்ற கட்டிடங்களுக்கான தண்டப்பண அறவீட்டின் போது ரூபா 41,287 பெறுமதிசேர் வரி மற்றும் சமூக சேவை பாதுகாப்பு வரி (SSCL) சட்டத்திற்கு முரணாக அறவிடப்பட்டிருந்தது.	பதில் தரப்படவில்லை.	வரிப்பதிவு மேற்கொள்ளப்படாமல் பெறுமதி சேர் வரி, சமூக சேவை பாதுகாப்பு வரி என்பன அறவிடுவது சட்டத்திற்கு முரணானது. வரிப் பதிவு செய்ய உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும்.
(i)	மாவடிப்பள்ளி நூலகத்தின் தரம் - III ற்குரிய தகமையில் ஆளணி வெற்றிடங்கள் நியமிக்கப்படாமல் பற்றாக்குறையாக காணப்படுகின்றது.	பதில் தரப்படவில்லை.	உரிய வெற்றிடங்களை நிரப்ப நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும்.

3.2 பயன்படுத்தப்படாத/ குறைவாக பயன்படுத்தப்பட்ட சொத்து

கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	சிபார்சு
வடகிழக்கு கரையோர சமூக அபிவிருத்தி திட்டத்தின் கீழ் ரூபா 14,347,200 செலவில் நிர்மாணிக்கப்பட்டு 2009 ஆம் ஆண்டு சபைக்கு கையளிக்கப்பட்ட கடைத்தொகுதிகளில் 14 கடையறைகளினை பல வருட காலமாக வாடகைக்கு விடுவதற்கு சபையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	பதில் தரப்படவில்லை.	கடைகளையும் வாடகைக்கு வழங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்

	கணக்காய்வு அவதானிப்புகள்	சபையின் கருத்துரைகள்	சிபாரிசுகள்
(அ)	சபைக்குச் சொந்தமானதும் மற்றும் சபையினால் பயன்படுத்தப்படும் காணி மற்றும் கட்டிடங்கள் மற்றும் 29 வாகனங்களின் பெறுமதிகள் மீள்மதிப்பிடப்பட்டு அதன் உண்மைப் பெறுமதி கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.	பதில் தரப்படவில்லை.	காணி மற்றும் கட்டிடங்களின் பெறுமதிகளி னை மீள்மதிப்பிட நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஆ)	சபையினால் பயன்படுத்தப்படும் 46 வாகனங்களில் 22 வாகனங்களுக்கான உரிமை இதுவரை மாற்றம் செய்யப்படாமல் காணப்படுகின்றன.	பதில் தரப்படவில்லை.	உரிமை மாற்றம் செய்ய அவசியமான நடவடிக்கை களை துரிதமாக மேற்கொள்ள வேண்டும்.
(இ)	2021 ஆம் ஆண்டில் உள்ளூராட்சி திணைக்களம் மற்றும் உள்ளூராட்சி உதவி ஆணையாளர் காரியாலயத்திடமிருந்து நன்கொடையாக கிடைக்கப் பெற்ற உபகரணங்களின் பெறுமதிகள் கணிப்பிடப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.	பதில் தரப்படவில்லை.	பெறுமதிகளை கணிப்பிட்டு நிதிக்கூற்றுக்க ளில் காட்டுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஈ)	சபைக்கு சொந்தமான 04 லொறிகள் 04 உழவியந்திரங்கள் மற்றும் 02 மோட்டார் சைக்கிள்களினை திருத்தம் செய்து மீளப் பயன்படுத்துவதற்கு அல்லது ஏலத்தில் விற்பனை செய்வதற்கு சபையினால் எதுவித தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	பதில் தரப்படவில்லை.	திருத்தம் செய்து மீளப் பயன்படுத்துவ தற்கு அல்லது அதனை ஏலத்தில் விற்பனை செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(உ)	சபையின் அலுவலகக் கட்டிடம், கலாச்சார மண்டபம் அமைந்துள்ள காணி, பொதுச்சந்தை கட்டிடக் காணி மற்றும் திண்மக்கழிவகற்றல் நிலையம், கலாச்சார மண்டபம் அமைந்துள்ள காணிகள் ஆகியவற்றினை சபையின் பெயருக்கு மாற்றிக்கொள்வதற்கு பிரதேச செயலகத்திற்கு உரிய ஆவணங்கள் அனுப்பியிருந்தும் கணக்காய்வுத் திகதி வரைக்கும் எதுவித தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	பதில் தரப்படவில்லை.	சொத்துக்களின் உரிமையினை சபையின் பெயருக்கு மாற்றிக் கொள்வதற்கு விரைவாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

3.4 பெறுகை முகாமைத்துவம்

	கணக்காய்வு அவதானிப்புகள்	சபையின் கருத்துரைகள்	சிபாரிசுகள்
(அ)	மீளாய்வாண்டில் உள்ளூராட்சி அபிவிருத்தி ஆதார திட்டத்தின் (LDSP) ஊடாக சிறு ஆடைத் தொழிற்சாலைக் கட்டடமானது ரூபா 8,892,852 இல் புனருத்தானம் செய்யப்பட்டிருந்தது. களவிஜயத்தின் போது 42 24W LED & LED Pannal மாத்திரமே பொருத்தப்பட்டிருந்தது. மற்றும் ஒவ்வொன்றும் ரூபா 8,000 குறைவான Bajaj ceiling fan	பதில் தரப்படவில்லை	மேலதிகமாக சிபாரிசு செய்யப்பட்டு கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த தொகை அறவீடு செய்யப்பட வேண்டும்

	பொருத்தப்பட்டிருந்தது. இதனால் ரூபா 143,610 மேலதிகமாக சிபாரிசு செய்யப்பட்டு கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.		
(ஆ)	பெறுகை வழிகாட்டி இல 5.4.12 இணங்க பெறுமதிசேர் வரிக்கொடுப்பனவுகள் செலுத்தி தொடர்ந்துவரும் மாதத்தின் 15 நாட்களுக்குள் அவ்விபரத்தினை இறைவரி திணைக்களத்திற்கு அனுப்பி பிரதியினை கணக்காய்வு தலைமையதிபதிக்கு அனுப்ப வேண்டியிருந்த போதிலும் மீளாய்வாண்டில் சபையினால் கட்டிட மற்றும் நிர்மாண சேவைக்காக ரூபா 3,564,501 கொடுப்பனவு செய்யப்பட்டிருப்பினும் இன்நடைமுறை பின்பற்றபட்டிருக்கவில்லை.	பதில் தரப்படவில்லை.	பெறுகை வழிகாட்டியினை பின்பற்றுதல் வேண்டும்.
(இ)	பெறுகை வழிகாட்டி இல. 4.3.1 & 2 இணங்க மொத்த கிரய மதிப்பீடு தயாரிக்கின்ற போது ஒப்பந்ததாரர் பெறுமதிசேர் வரி செலுத்துகைக்கு பதிவு செய்யப்படாதவராயின் குறித்த பெறுமதிசேர் வரித்தொகையினை மொத்தக் கிரய மதிப்பீட்டில் சேர்க்கப்பட வேண்டியதில்லை.ஆயினும் குறித்த வரியில் பதிவு செய்யாதவருக்கு கிரய மதிப்பீடு தயாரிக்கும் போது வரி ரூபா 90,000 சேர்க்கப்பட்டிருந்தது.	பதில் தரப்படவில்லை.	பெறுகை வழிகாட்டியினை பின்பற்றுதல் வேண்டும்.

3.5 மனிதவள முகாமைத்துவம்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரைகள்	சிபார்சுகள்
(அ)	2018 ஜனவரி 24 ஆந் திகதிய 02/2018 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் பிரகாரம், சபையில் காணப்படும் ஆளணியினர்களை முறையாக திட்டமிடுவதற்கும், அவர்களுக்கு தேவையான போதியளவான பயிற்சிகள் அனைத்து உத்தியோகத்தர்களுக்கும் வழங்குவதற்கும், மனித வளத்தினை வினைத்திறனாக பயன்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	பதில் தரப்படவில்லை.	சுற்றறிக்கைகளினை பின்பற்றுதல் வேண்டும் வேண்டும்.
(ஆ)	சபையிற்கான ஆளணி அனுமதியின் கீழ் முன்பள்ளி ஆசிரியர் 02 அனுமதியளிக்கப்பட்டிருப்பினும் கணக்காய்வுத் திகதி வரை அவ்வெற்றிடத்தினை நிரப்புவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	பதில் தரப்படவில்லை.	உரிய வெற்றிடங்களை நிரப்ப நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும்.

4. கணக்களிப்பொறுப்பும் நல்லாட்சியும்

4.1 நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்தல்

கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	சிபார்சு
2023 டிசம்பர் 15 ஆம் திகதியும் PT/18/2022 ஆம் இலக்கமும் கொண்ட மாகாணத் திறைசேரி சுற்றுநிருபத்திற்கமைய நிதிக்கூற்றுக்கள் 2025 பெப்ரவரி 28 ஆம் திகதிக்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்பிக்கப்பட வேண்டுமென குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் சபையினால் மீளாய்வாண்டுக்கான நிதிக்கூற்றுக்கள் 2025 மார்ச் 10 ஆம் திகதியே கணக்காய்வுக்காக சமர்பிக்கப்பட்டிருந்தது.	பதில் தரப்படவில்லை.	நிதிக்கூற்றுக்கள் பெப்ரவரி 28 ஆந் திகதிக்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

4.2 நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள்

கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	சிபார்சு
2018 ஏப்ரல் 23 ஆந் திகதிய ச.செ.பொது/2018.61 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோள்களையும் இலக்குகளையும் அடைந்து கொள்வதற்கு தேவையான தரவுகளை சேகரித்து அதன் மூலம் தேவையான நிதியேற்பாடுகளை மேற்கொள்வதற்கு சபையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	பதில் தரப்படவில்லை.	தேவையான நிதியேற்பாடுகளை மேற்கொள்ள உரிய நடவடிக்கை களை துரிதமாக எடுத்தல் வேண்டும்.

4.3 திண்மக்கழிவு முகாமைத்துவம்

கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	சிபார்சு
சபையினால் சேகரிக்கும் கழிவுகளை உக்கக்கூடிய மற்றும் உக்காத கழிவுகள் என தரம் பிரித்து சேகரிக்கப்படாததினால் சேதனப் பசளை தயாரிப்பு பணிகள் மேற்கொள்ளப்படவில்லை. மேலும் நிலையத்திற்குரிய உபகரணங்கள் பயன்படுத்தபடாமல் பாவனையற்று காணப்படுகின்றது.	பதில் தரப்படவில்லை.	சேதனப்பசளை உற்பத்தி நிலையத்தினை இயக்கி உபகரணங்களை பயன்படுத்த நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

4.4 எதிர்பார்த்த பூர்த்தியாக்கல் மட்டத்தை பெற்றுக்கொள்ளாமை

கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	சிபார்சு
மீளாய்வாண்டின் நிதியேற்பாட்டில் ரூபா 998,330 காரைதீவு – 09, பாலையடிப் பிள்ளையார் கோவில் குறுக்கு வீதியிலுள்ள பொதுமக்களுக்கு குடிநீர் விநியோகம் செய்வதற்காக தேசிய நீர் விநியோகம் மற்றும் வடிகாலமைப்பு சபைக்கு கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் இதுவரை நீர் வழங்க நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை.	பதில் தரப்படவில்லை.	குடிநீர் விநியோகம் செய்வதற்கான உரிய நடவடிக்கை களை துரிதமாக எடுத்தல் வேண்டும்.